| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா, | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| சென்னை - 600 006. | |

**ந.க.எண்.** 023720/ எச்1 / 2022 **நாள்** : 30 .01.2023

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள்** : சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - இடைநிலை மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – தனித் தேர்வர்களிடமிருந்து தக்கல் முறையில் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்கள் (Govt.Exams Service Centres) மூலம் ஆன்-லைனில் விண்ணப்பங்கள் பெறுதல் – கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் - அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை** : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதம், நாள்.22.12.2022.

******

பார்வையில் காணும் கடிதத்தின்படி நடைபெறவிருக்கும் மார்ச்/ஏப்ரல் 2023, இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **26.12.2022** முதல் **03.01.2023** வரையிலான நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கு (Government Exams Service centres) நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 05.01.2023 முதல் 07.01.2023 வரையிலான நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணத்தினை செலுத்தி ஆன்-லைனில் விண்ணப்பித்தல் தொடர்பாக தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பின்படி, மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறிய பத்தாம் வகுப்பு /

-2-

மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்கள் தற்போது தக்கல் முறையில் **இன்று 30.01.2023 முதல் 01.02.2023 வரையிலான நாட்களில் மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களில்** (Government Examinations Service centres) **நேரில் சென்று தேர்வுக் கட்டணத்துடன் கூடுதலாக ரூ.1000/- (மேல்நிலை) / ரூ.500 (பத்தாம் வகுப்பு) சிறப்பு கட்டணமாக செலுத்தி ஆன்லைனில் விண்ணப்பங்களை** பதிவு செய்து **கொள்ள** வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க வரும் தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்தல் தொடர்பாக பார்வையில் காணும் கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி ஆன்-லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யுமாறு தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள உரிய அறிவுரை வழங்குமாறும், அவ்வாறு சேவை மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை ஆன்லைனில் செலுத்தியபிறகு பெறப்படும் இரசீது (Payment Receipt) ஆகியவற்றை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் 02.02.2023 **அன்று** ஒப்படைக்குமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஓம்/-**

**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காக
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நகல் அனுப்பப்படுகிறது.